செ.வெ.எண்: 36 நாள்: 23.09.2020

**திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு.த.ஆனந்த் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருவாரூர் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பள்ளிசத்துணவுத் திட்டத்தின்கீழ் 66 சத்துணவு அமைப்பாளர்கள், 34 சமையலர்கள் மற்றும் 186 சமையல் உதவியாளர்கள் பணிக்கு தகுதியானோர் நேரடியாக நியமிக்கப்படவுள்ளனர்.

**அமைப்பாளர் பணித் தகுதிகள்:**பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர்களுக்கு 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் 8ம் வகுப்புதேர்ச்சி (அல்லது) தேர்ச்சி பெறாதவராக இருக்கலாம். 31.08.2020 அன்றைய நிலையில் பொதுமற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். மாற்றுத்திறானளிகள் அந்த இனத்துக்கென குறிப்பிட்ட குறைந்தபட்ச வயது பூர்த்தியடைந்தும் 43 வயதுக்குள் இருக்க வேண்டும்.

**சமையலர் பணித் தகுதிகள்:**பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர்களுக்கு 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 31.08.2020 அன்றைய நிலையில் பொதுமற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

**சமையல் உதவியாளர் பணித் தகுதிகள்:** பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர்களுக்கு 5-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவராக இருக்கலாம். பழங்குடியினர் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். 31.08.2020 அன்றைய நிலையில் பொதுமற்றும் ஆதிதிராவிடர் 21 முதல் 40 வயதுக்குள்ளும், பழங்குழயினர் 18 முதல் 40 வயதுக்குள்ளும், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 முதல் 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.

கல்வித் தகுதிச் சான்று, இருப்பிடசான்று, வருமானசான்று, வயதுசான்று (மாற்றுசான்றிதழ்), சாதிசான்று, விதவைசான்று, ஆதரவற்ற விதவை, கணவரால் கைவிடப்பட்டோர் இருப்பின் அதற்கான சான்றிதழ் மற்றும் மாற்றுதிறனாளியாக இருப்பின் அதற்கான சான்றிதழ் ஆகியவற்றில் சுய கையொப்பம் இட்ட நகல்களுடன் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.09.2020-க்குள்

விண்ணப்பிக்க வேண்டும். மேலும் காலிப்பணியிட விவரம், இனசுழற்சி விவரம் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவங்களையும் தொடர்புடைய அலுவலகங்களில் பெற்று கொள்ளலாம், அல்லது www.tiruvarur.nic.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் மூலமாக நேர்காணலுக்கான அழைப்பு கடிதம் அனுப்பி வைக்கப்படும் என திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆனந்த் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவாரூர் மாவட்டம்.**